# கீழ் கோத்தகிரி பகுதிகளில் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ பரப்புரை!

## அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன்- மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ பங்கேற்பு!

உதகை, டிச.14-

மக்கள் நலத் திட்டங்களால் மாநிலத்தின் வளர்ச்சியை முன்னேற்றிக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்கள் தொடங்கி வைத்த “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” என்ற வெற்றி முழக்க முன்னெடுப்பின் தொடர்ச்சியாக,

நீலகிரி மாவட்டம், கீழ் கோத்தகிரி ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட பூத் எண் 12 நடுகுளா பகுதிகளில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது.




இதில், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜூ ஆகியோர் கலந்துகொண்டு,

திராவிடமாடல் அரசின் நலத்திட்ட பயன்களை மக்களுக்கு எடுத்துக் கூறி மீண்டும் 2026 இல் கழக ஆட்சி அமைய அயராது பாடுபடுவோம், என தீர்மானிக்கப்பட்டு மக்களோடு கலந்துரையாடினர்.

மேலும் மொத்தமுள்ள 10 BLC உறுப்பினர்களுக்கும் தலா நூறு வாக்காளர் என பிரித்துக் கொடுக்கப் பட்டது.

BLC உறுப்பினர்கள் ஒவ்வொரு வீடாக சென்று வாக்காளர் பெயர்களை சரி பார்க்க வேண்டும் எனவும், BLA 2 மற்றும் BDA இருவரும் நடைபெறும் பணிகளை கண்காணிக்க வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் போஜன்,கீழ் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன்,BLA 2 மணியன்,BDA திலீப்குமார், BLC நிர்வாகிகள் கிருஷ்ணன், மோகன், லட்சுமி, நஞ்சுண்டன்,ஜோகி, குள்ளன் மற்றும் ராஜு எஸ். எஸ். குமார் வழக்கறிஞர் அணி குயில்அரசன் வழக்கறிஞர் ஆலன்,ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மிதுன் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சேலம் மாவட்டத்தில்

# மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.199.12 கோடியில் நலத்திட்டங்கள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம், டிச.14-

தமிழ்நாட்டிலேயே சேலம் மாவட்டத்தில் தான் அதிக எண்ணிக்கையில் பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ளது என்றும் கடந்த 4 1/2 ஆண்டுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கென சேலம் மாவட்டத்தில் மட்டும் ரூ.199.12 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் 143 பயனாளிகளுக்கு ரூ.1 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழா சேலம், தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசியதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் மீது அக்கறையோடு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி தந்திருக்கிறார்கள். அதே போன்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையினை தனது நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் வைத்து அவர்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருகிறார்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாத்து, சமுதாயத்துடன் இணைந்து வாழ மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம் நாள் உலக மாற்றுத் திறனாளிகள் தினம் கடைப் பிடிக்கப்படுகிறது. அந்த வகையில் “தடைகளை தகர்ப்போம் அனைவரையும் உள்ளடக்கிய சமுதாய வளர்ச்சி பாதை அமைப்போம்” என்ற இலட்சிய நோக்குடன் இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்று வருகிறது. மாற்றுத் திறனாளிகள் நலன் காப்பதில் முன்மாதிரி அரசாக தமிழ்நாடு அரசு உள்ளது. இந்தியாவிலேயே முதன் முதலாக மாற்றத்திறனாளிகளை உள்ளாட்சிகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் சேலம் மாவட்டத்தில் 15,264 நபர்கள் மாதம் ரூ.2000 ஓய்வூதியமாக பெற்று பயனடைந்து வருகின்றனர். குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் இதுவரை 83,645 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. சுய தொழில் புரிய ஆர்வமுள்ள 18 வயது முதல் 45 வயது வரை உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 75,000 வங்கிக் கடன் ரூ.25,000 மானியத்துடன் வழங்கப்படுகிறது.

மேலும், கல்வி உதவித் தொகை, பட்டப்படிப்பு உதவித் தொகை, திருமண நிதி உதவி மற்றும் 8கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. அரசு பேருந்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான 75% இலவச பேருந்து கட்டண சலுகையும், கல்வி நிறுவனங்களில் 5% இட ஒதுக்கீடும், அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களில் 4 % இட ஒதுக்கீடும் வழங்கப்படுகிறது. மூன்று சக்கர வாகனம் பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி, பார்வை குறைபாடு உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு கருப்பு கண்ணாடிகள், காதொலிக் கருவிகள். கால் தாங்கிகள் ஊன்று கோல்கள் என உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து 5 லட்சம் வரை முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டமும், தமிழ்நாட்டிலேயே சேலம் மாவட்டத்தில் தான் அதிக எண்ணிக்கை பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 4% ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் 2,05,491 பயனாளிகளுக்கு ரூ.199.12 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெற்று வரும் இவ்விழாவின் மூலம் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரியால் இயங்கும் சிறப்பு வகை சக்கர நாற்காலி, பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி, மோட்டார் பொருந்திய தையல் இயந்திரம் என மொத்தம் 143 மாற்றுத் திறனாளி களுக்கு ரூ.1 கோடியே 43 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டுவரும் இத்தகைய நலத்திட்ட உதவிகளைப் பெற்றுள்ள பயனாளிகள் இதை பயன்படுத்தி தங்கள் வாழ்வில் மென்மேலும் முன்னேற்றம் அடைய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசினார்.

இதனைத்தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவையொட்டி மாற்றுத்திறனாளிகளுக்கென மாவட்ட அளவில் நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஓவியப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும், மாற்றுத் திறனாளி களுக்காக சிறப்பாக சேவைபுரிந்து வரும் சிறப்பு பள்ளிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களைப் பாராட்டி நினைவு பரிசுகளை வழங்கினார்கள்.

முன்னதாக சென்னையில் 03.12.2025 அன்று நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் சிறப்பான ஓவியத்திற்கான முதல் பரிசு பெற்று முதலமைச்சர் அவர்களிடம் ரூ.10,000த்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை பெற்ற மாணவர்கள் அமைச்சர் இரா.இராஜேந்திரனிடம் வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி, மாற்றுத்திறனாளிகள் நல சங்கத் தலைவர் அத்தியண்ணா உள்ளிட்ட தன்னார்வலர்கள், மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டனர்.




கன்னியாகுமரி குளச்சல் நகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு ஆய்வு மற்றும் நலவாரிய அடையாள அட்டைகள், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி குளச்சல் நகரமன்ற தலைவர் நசீர் தலைமையில் ஆணையாளர் கன்னியப்பன் மற்றும் நகர கழக செயலாளர் நாகூர் கான் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழக மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இனைச் செயலாளரும், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவருமான திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளரும், மேயருமான ரெ. மகேஷ் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. பிரின்ஸ்ஆகியோர் கலந்து கொண்டு தூய்மைப் பணியாளர்களிடம் ஆய்வு நடத்தி, கருத்துக்கள் கேட்டு, நலவாரிய அடையாள அட்டைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

## தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக

# நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

12 - 12 -2025



**புதுடெல்லி, டிச. 14 -**

**நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் 1.12.2025 அன்று தொடங்கியது. இத்தொடரில் மக்களவை, மாநிலங்களவை இரு அவைகளிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக நேற்று முன்தினம் (12.12.2025) எழுப்பிய கேள்விகள் வருமாறு:**

**1. ரேபிஸ் மரணங்களுக்கு தீர்வு என்ன?**

**ஆ. இராசா எம்.பி. கேள்வி**



நாட்டில் அதிகரித்து வரும் ரேபிஸ் மரணங்கள் மற்றும் ரேபிஸினால் பொது சுகாதாரத்திற்கு ஏற்படும் ஆபத்து குறித்து ஒன்றிய அரசின் நிலைப்பாடு என்ன என திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். நாய்க்கடிக்கு பிறகான சிகிச்சை வசதிகளை வலுப்படுத்தவும், ரேபிஸ் எதிர்ப்பு தடுப்பூசிகள் மற்றும் இம்யூனோகுளோபுலின் கிடைப்பதை உறுதி செய்யவும் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? நாட்டின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் ரேபிஸைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பயிற்சிப் பொருட்களுடன் ஏதேனும் சிறப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தொடங்கப்பட்டுள்ளதா? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**2. பாதியில் நிறுத்தப்பட்டுள்ள நேபாளத்தில் மருத்துவம் படிக்கும் இந்திய மாணவர்களின் எதிர்காலம் என்ன?**

**தேனி தங்க தமிழ்செல்வன் எம்.பி.**
**கோவை கணபதி ராஜ்குமார் எம்.பி. கேள்வி**





நேபாளத்தில் சமீபத்தில் ஏற்பட்ட உள்நாட்டு புரட்சி காரணமாக, அங்கு மருத்துவம் படிக்கும் பல இந்திய மாணவர்கள் இந்தியாவுக்குத் திரும்பியுள்ளனர். அவர்களின் படிப்பு மற்றும் எதிர்காலம் பாதிக்காமல் இருக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என திமுக மக்களவை உறுப்பினர்கள் தங்க தமிழ்செல்வன் மற்றும் கணபதி ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

நேபாளத்தில் மருத்துவம் படிக்கும் இந்திய மாணவர்களை இந்திய தேசிய மருத்துவ ஆணையம் (NMC) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகியவற்றால் அங்கீகரிக்கப்படுவார்களா? இந்த மாணவர்கள் மருத்துவ படிப்பு முடிப்பதை உறுதி செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

**3. அங்கன்வாடிகளை தொடக்கப் பள்ளிகளுடன் இணைக்கும் திட்டத்தின் செயல்பாடுகள் என்ன?**

**சேலம் செல்வகணபதி எம்.பி.**



11 லட்சம் அங்கன்வாடி மையங்களை (AWCs) தொடக்கப் பள்ளிகளின் வளாகத்தில் இணைக்கும் திட்டம் குறித்து சேலம் மக்களவை உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார். கிட்டத்தட்ட 2.9 லட்சம் அங்கன்வாடிகளை அருகிலுள்ள பள்ளிகளுடன் இணைக்கவும் 9.16 லட்சம் 1 ஆம் வகுப்பு உள்ள பள்ளிகளுடன் இணைக்கவும் அரசு எடுத்துள்ள முடிவின் தற்போதைய நிலை என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**4. எப்போது முடியும் மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகள்?**

**வேலூர் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி**



மதுரையில் எய்ம்ஸ் கட்டுமானப் பணிகளை ஒன்றிய அரசு மொத்தமாக கைவிட்டுவிட்டதா எனமக்களவையில்திமுக எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மற்றும் ஒன்றிய அரசு வழங்கிய நிதியின் அளவு, JICA யிடமிருந்து நிதி பெறுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணங்கள், மதுரையில் உள்ள AIIMS கட்டுமானத்திற்காக இதுவரை செலவிடப்பட்ட நிதியின் அளவு மற்றும் அதன் கட்டுமானப் பணிகள் முடிவடைய தேவைப்படும் காலம் எவ்வளவு எனும் பல்வேறு கேள்விகளை அவர் கேட்டுள்ளார்.

**5. தற்கொலையிலிருந்து மாணவர்களை காக்க நடவடிக்கை என்ன?**

**பொள்ளாச்சி ஈஸ்வரசாமி எம்.பி. கேள்வி**



நாட்டில் நிகழும் மொத்த தற்கொலைகளில் 7.6% பேர் மாணவர்கள் என்பதை குறிப்பிட்டு இளைஞர்களின் மனநலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஒன்றிய அரசின் செயல்திட்டம் என்ன என மக்களவை உறுப்பினர் ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மாவட்ட மனநலத் திட்டத்தின்கீழ் (DMHP) சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை என்ன? செயலில் உள்ள மாணவர் மனநலத் திட்டங்கள்/கூறுகளை செயல்படுத்திய பள்ளிகள்/கல்லூரிகளின் எண்ணிக்கை என்ன? ஆலோசனை அமர்வுகள், பரிந்துரைகள் மற்றும் மாணவர் மனநலத்திற்கான வள ஒதுக்கீடு உட்பட DMHP இன் கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை என்ன? மாணவர் தற்கொலைகளைக் குறைப்பதில் DMHP இன் தாக்கம் குறித்து நடத்தப்பட்ட மதிப்பாய்வு அல்லது தணிக்கைகளின் விவரங்கள் மற்றும் அதன் முடிவுகள் என்ன என்று அவர் கேட்டுள்ளார்.

**6. தமிழ்நாடு மருத்துவத்துறையில் தனது பங்களிப்பை மறுக்கிறதா ஒன்றிய அரசு?**

**பெரம்பலூர் அருண் நேரு எம்.பி.**



கடந்த மூன்று நிதியாண்டுகளில் தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகையின் விவரங்கள் குறித்து பெரம்பலூர் மக்களவை உறுப்பினர் அருண் நேரு கேள்வி எழுப்பியுள்ளார். மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையின் கட்டுமானம் நிறைவுறாததை குறிப்பிட்டும் 2021 முதல் ஆரம்ப சுகாதார மையங்களை மேம்படுத்த ஒன்றிய அரசு அளித்துள்ள நிதி குறித்தும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

**7. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இணையத்தில் பாதுகாப்பை உறுதி செய்க!**

**தஞ்சாவூர் முரசொலி எம்.பி.**



இணையத்தின் மூலம் ஏற்படும் அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்பின்மையில் இருந்து குழந்தைகள் மற்றும் பெண்களை பாதுகாக்க ஒன்றிய அரசு செயல்படுத்தி வரும் நடைமுறைகள் குறித்து மக்களவையில் முரசொலி எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

போலி/அவதூறு செய்யும் பயனர்கள்/சைபர் குற்றவாளிகளை எளிதாகக் கண்காணிக்க, தனியுரிமையை சமரசம் செய்யாமல் சமூக ஊடக கணக்குகளை ஆதார் அடிப்படையில் உருவாக்கும் திட்டத்தை கொண்டு வருவது குறித்து அரசு எடுக்கும் நடவடிக்கைகள் என்ன? ஆன்லைன் துன்புறுத்தலைத் தடுக்க, பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே பாதுகாப்பை உறுதி செய்ய/பொறுப்பான/நேர்மறையான டிஜிட்டல் நடத்தையை ஊக்குவிக்க, சமூக ஊடக தளங்களுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**8. டெல்டா நெற்பயிர் விவசாயிகளின் நிவாரணம் குறித்து தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கு பதில் என்ன?**

**பி.வில்சன் எம்.பி. கேள்வி**



தமிழ்நாட்டில் அதிகப்படியான மழைப் பழிவு காரணமாக நெல் பயிர்களில் அதிக ஈரப்பதத்திற்கு வழிவகுத்ததைக் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து சீரான கொள்முதல் செய்ய நெல்லுக்கான அனுமதிக்கப்பட்ட ஈரப்பத வரம்பை 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்ற தமிழ்நாடு முதலமைச்சரின் கோரிக்கைக்கு ஒன்றிய அரசின் பதில் என்ன என்று மாநிலங்களவையில் திமுக எம்.பி. பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார். விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்ததாலும், கூழ் தயாரிக்கும் தொழில்களின் தேவை இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ள மா விவசாயிகளுக்கு PMAASHA (விவசாயி வருமான பாதுகாப்புத் திட்டம்) இன் கீழ் சந்தை தலையீட்டுத் திட்டத்தை (MIS) செயல்படுத்தவும், இழப்பீடு வழங்கவும் தமிழ்நாடு அரசு கோரிக்கைக்கு ஒன்றிய அரசின் பதில் என்ன?

**9. உணவு பதப்படுத்தும் துறையில் வேலைவாய்ப்பை உருவாக்குக**

**ராஜாத்தி சல்மா எம்.பி.**



நாட்டில் வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் ஒட்டுமொத்த தொழில்துறை வளர்ச்சிக்கு பங்களிப்பதில் உணவு பதப்படுத்தும் துறையின் திறன் குறித்து ஒன்றிய அரசு நடத்தியுள்ள ஆய்வுகள் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட உணவு பதப்படுத்தும் துறையில் பெண்கள், பட்டியல் வகுப்பினர் (SC), பட்டியல் பழங்குடியினர் (ST), மற்றும் சிறுபான்மை சமூகத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு விவரங்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் துறையில் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை மேம்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**10. விபத்துகளைத் தவிர்க்க ரயில்வே பாலங்களை ஆய்வு செய்திடுக !**

**ஆர். கிரிராஜன் எம்.பி.**



இரயில்வே துறையில் விபத்துக் களை முற்றிலுமாக குறைக்க போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதா என ஆர். கிரிராஜன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். நாட்டில் 50 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான ரயில்வே பாலங்களின் மொத்த எண்ணிக்கை என்ன? நாடு முழுவதும் உள்ள ரயில்வே பாலங்களில் நிலைத்தன்மை மதிப்பீடு மற்றும் பாதுகாப்பு தணிக்கைகளை நடத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும் கேட்டுள்ளார்.

# கரூரில் மாணவ - மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் - வினா-விடை தொகுப்பு!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர்.டிச.14-

கரூரில் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள், வினா விடை தொகுப்பு புத்தகங்களை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார்.

தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை மூலம் அரசுப் பள்ளிபயிலும் மாணாக்கர்களின் நலனுக்காக விலையில்லா சீருடைகள். புத்தகங்கள். காலணிகள். புத்தகப்பைகள், மிதிவண்டிகள், பேருந்து பயண அட்டை, கணித உபகரணப் பெட்டி உள்ளிட்ட பல்வேறு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கரூர் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 2019 மாணவர்களுக்கும். 3853 மாணவிகளுக்கு மொத்தம் 6772 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது.

அதன் தொடர்ச்சியாக கரூர் மாவட்டம், காந்திகிராமம் புனித தெரசா பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த 386 மாணவிகளுக்கும். பசுபதி பாளையம் சாரதா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 78 மாணவிகளுக்கும். விவேகானந்தா ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 41 மாணவர்களுக்கும், பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 123 மாணவிகளுக்கும். அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 93 மாணவிகளுக்கும். வாங்கல் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 41 மாணவர்களுக்கும், வாங்கல் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 51 மாணவிகளுக்கும் என மொத்தம் 913 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார்.

மேலும் 10 ம் வகுப்பைச் சேர்ந்த 7872 மாணாக்கர்களுக்கும். 12ம் வகுப்பைச் சேர்ந்த 6502 மாணவ மாணவியர்களுக்கும் வினா விடை வங்கி புத்தகங்களையும் வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார்.

கரூர் மாவட்டத்தில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கு 17,374 பேருக்கும் வினா விடை தொகுப்பு புத்தகங்கள் வழங்கப்பட உள்ளது. மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி கூறுகையில், திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து மாணவர்களுக்கான பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கி உள்ளார்கள்.

கரூர் மாவட்டத்தில் 10ம் வகுப்பு 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு வினா விடை தொகுப்பு புத்தகம் செந்தில் பாலாஜி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தொகுப்பு புத்தகம்

கரூர் மாவட்டத்தில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கு 17,374 பேருக்கும் புத்தகங்கள் வழங்கப்படுகிறது என்றார்.

இவ்விழாக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் (குளித்தலை). ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர் வெ. கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் விமல்ராஜ், துணை மேயர் ப.சரவணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ராஜீ, மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர். எஸ்.ராஜா, க.அன்பரசன், எஸ்.சக்திவேல், கரூர் வட்டாட்சியர் மோகன்ராஜ், கலந்துகொண்டனர்.